# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • நவம்பர் 13, 2021

Weekly E-paper • November 13, 2021




## அச்சமும் பேடிமையும் உச்சத்தில் கொண்டாரடி!

சுப.வீரபாண்டியன்

### மழை வெள்ளத்தில் முதலமைச்சர்

பொள்ளாச்சி மா. உமாபதி

### ஸ்மார்ட் சிட்டி ?

தலையங்கம்

### தமிழ்ச் சமூகத்தின் அடையாளம் திருவள்ளுவர்!

ஓவியா

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● நவம்பர் 13, 2021 Weekly E-paper ● November 13, 2021


# அச்சமும் பேடிமையும் உச்சத்தில் கொண்டாரடி!

**சுப.வீரபாண்டியன்**

“நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி

வஞ்சனை சொல்வாரடி – கிளியே

வாய்ச்சொல்லில் வீரரடி!

அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்


உச்சத்தில் கொண்டாரடி – கிளியே

உச்சத்தில் கொண்டாரடி!”

என்னும் பாரதியாரின் பாடல் வரிகளை நம் பாஜக நண்பர்கள் பலமுறை படித்திருப்பார்கள்! ஆனாலும் ஆதன் உட்பொருளை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

புரிந்திருக்குமானால், இப்படித் திருப்பூரில் ஒரு பள்ளிக்குச் சென்று தந்தை பெரியாரின் “பெண் ஏன் அடிமையானாள்?” என்னும் நூலை மாணவியருக்கு வழங்கக்கூடாது என்று தலைமையாசிரியரோடு மல்லுக் கட்டியிருக்க மாட்டார்கள்!

அந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் அய்யா பெரியாரால், 1926 முதல் 1931 வரையிலான காலகட்டத்தில் எழுதப்பட்டவை. 1942 ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது. ஏறத்தாழ 90-95 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட கட்டுரைகளைப் பார்த்து இப்போதும் அஞ்சுகின்றனர் என்றால், “அச்சமும் பேடிமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டாரடி” என்றுதானே பொருள்!




சில நாள்களுக்கு முன், திருப்பூர் தொடர்வண்டி நிலையம் அருகில் உள்ள, ஜெய்வாபாய் மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு, பாஜகவின் பொறுப்பாளர்கள் சிலர் வந்துள்ளனர். அப்பள்ளியில் 7000 மாணவியர் படிக்கின்றனர். மிகப் பெரிய பெண்கள் பள்ளி அது! தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் இலவயமாகக் கொடுத்த “பெண் ஏன் அடிமையானாள்?” என்னும் புத்தகத்தின் 2000 படிகளை நீங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்று கேட்டுத் தலைமை ஆசிரியை ஸ்டெல்லாவுடன் சண்டையிட்டுள்ளனர். அவற்றை மாணவிகளுக்குக் கொடுத்தால், பள்ளிக்கு எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திடுவோம் என்று கூறி மிரட்டியுள்ளனர்.

இந்த அராஜகப் போக்கைக் கண்டித்து, நேற்று திருப்பூரில், திமுக மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வராஜ் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பாஜகவைக் கண்டிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்று காலை அனைத்துக் கட்சியினரும், திருப்பூர் காவல் நிலையத்தில்புகார் மனு ஒன்று கொடுக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

அய்யா பெரியார்தான் சொல்வார் நாம் விளம்பரத்திற்குச் செலவு செய்ய வேண்டியதில்லை, அதனை நம் எதிரிகள் பார்த்துக் கொள்வார்கள் என்று. இன்றும் அந்த உதவியை அவர்கள் செய்துகொண்டே இருக்கின்றனர். பேசாமல் விட்டிருந்தால் அப்படி ஒரு நிகழ்வு நடந்ததே அப்பள்ளியைத் தாண்டி வெளியில் தெரிந்திருக்காது. இன்று தமிழகம் முழுவதும் அந்தப் புத்தகத்திற்கான நல்ல அறிமுகம் ஒன்றும் கிடைத்துள்ளது.

ஏற்கனவே பல இலட்சம் நூல்கள் விற்பனையாகியுள்ள நிலையில், இப்போது மீண்டும் ஒரு விளம்பரத்தை பாஜகவினர் அந்நூலுக்குக் கொடுத்துள்ளனர். அந்தப் புத்தகம் கண்டு ஏன் மிரள்கின்றனர் என்பதற்கு ஒரு நியாயமான காரணமும் இருக்கவே செய்கிறது. அந்த நூல்தான் தமிழ்நாட்டில் முதன்முதலாக, இந்திய அரசுச் சட்டம் கொண்டுவருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, சொத்துரிமை குறித்தும், கர்ப்பத் தடை குறித்தும் பேசிய நூல்! பெண்களுக்கான மணமுறிவு உரிமையை வலியுறுத்திய நூலும் அதுதான்! இவ்வளவு உரிமைகளும் பெண்களுக்கு வந்துவிட்டால் பிறகு பாலினச் சமத்துவம் வந்துவிடுமே! அது இந்துத்துவாவிற்கு எதிரானதாயிற்றே! அதனால்தான் அஞ்சுகிறார்கள்.

இதில் இன்னொரு சுவையான செய்தியும் இருக்கிறது. 7000 பேர் படிக்கும் பள்ளிக்கு ஏன் 2000 நூல்களை மட்டும் நம் த.பெ.தி.க தோழர்கள் வழங்கியுள்ளனர்? வேறொன்றுமில்லை! ஏற்கனவே அப்பள்ளி மாணவியர் 5000 பேருக்கு அந்நூல்கள் வழங்கப்பட்டு விட்டன! பரிதாபத்திற்குரிய பாஜக நண்பர்களுக்கு இந்த உண்மை தெரியாது! ●

# மழை வெள்ளத்தில் முதலமைச்சர்

## பொள்ளாச்சி மா. உமாபதி

ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவமழை நவம்பர் முதல் வாரத்தில் தொடங்கும். இந்த ஆண்டு மழையின் அளவு கூடுதலாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை செய்தது. பெருமழை, வெள்ளப்பெருக்கால் ஏற்படும் அழிவுகளையும், சேதங்களையும் தவிர்க்க தமிழக முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட பேரழிவுகளைக் கருத்தில் கொண்டு அவை தொடரா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் தலைமைச் செயலாளர் இறையன்பு அவர்கள் கூட்டங்கள் நடத்தி நகர்ப்புற வளர்ச்சி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைகளின் சார்பில் 20-9-2021 முதல் 25-9-2021 வரை மாபெரும் மழைநீர் வடிகால் தூய்மைப் பணி முகாமாக அறிவித்து அனைத்து, மழைநீர் வடிகால்களையும் தூர்வாரித் தூய்மைப்படுத்தச் சிறப்பு இயக்கம் நடத்த ஆவன செய்தார்.

வடகிழக்குப் பருவமழை தொடங்க 10 நாள்களுக்கு முன்பாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொண்டது. நவம்பர் எட்டாம் தேதி பெய்த மழையில் தியாகராயநகர், எழும்பூர், பெரம்பூர் போன்ற பகுதிகளில் மழை வெள்ளம் சூழத் தொடங்கியதும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பான இருப்பிடங்கள், பசிப்பிணி தீர்க்க உணவு ஏற்பாடுகள், தேங்கிய மழை நீரை வெளியேற்ற பம்பு செட்டுகள் என அனைத்து ஏற்பாடுகளையும் முன்களப்பணியாளராக நின்று செயல்பட்டார். அன்றைய தினம் சற்றேறக்குறைய ஒன்பது மணி நேரம் மக்களோடு மக்களாக மழை வெள்ளத்தில் நின்று பணியாற்றினார்.

அத்தோடு நில்லாமல் மறுநாள் நவம்பர் 9ஆம் நாளில் சைதாப்பேட்டை, வேளச்சேரி, கொளத்தூர் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். செம்பரம்பாக்கம், புழல், பூண்டி நீர்த்தேக்கங்களில் நீர்வரத்துக்கு ஏற்ப நீரை வெளியேற்ற உரிய ஆணைகளைப் பிறப்பிக்கிறார். ஏரிகளில் இருந்து நீரை வெளியேற்றும் போது நீர்வழிப் பாதையில் கரையோரம் வாழும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்.

மறுநாள் 10-11-2021 அன்று எழிலகத்தில் அமைந்துள்ள பேரிடர் மேலாண்மை மையத்திற்குச் சென்று, அங்கு நடைபெறும் பணிகளைப் பார்வையிட்டு அலுவலர்களையும் பணியாளர்களையும் ஊக்கப்படுத்துகிறார். அன்றும் கொளத்தூர் உள்ளிட்ட



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்குச் சென்று உரிய நிவாரணப் பணிகளை விரைவு படுத்துகிறார். சென்னை முழுவதும் ஆங்காங்கே பெருமளவில் உணவு தயாரிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க உத்தரவிட்டதோடு, அம்மா உணவகங்களில் அனைத்து மக்களுக்கும் இலவச உணவு வழங்க ஆணையிட்டார்.

சென்னை முழுவதும் எங்கெல்லாம் மரங்கள் விழுந்து சாலைப் பயணத்திற்குத் தடையை ஏற்படுத்துகின்றனவோ அங்கெல்லாம் அரை மணி நேரத்தில் அவை வெட்டி அகற்றப்படுகின்றன.

பொதுப்பணித்துறை, மாநகராட்சி, சுகாதாரத்துறை, மின் வாரியப் பணியாளர்கள், காவல்துறையினர் என சம்பந்தப்பட்ட அனைத்துத் துறையினரையும் உடனிருந்து ஊக்குவித்துப் பணியாற்றச் செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைத்து அரும்பணி ஆற்றி வருகின்றார்.

முதலமைச்சரின் இடைவிடாத மக்கள் பணியைக் கண்ட முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், கான மயிலாட கண்டிருந்த வான்கோழியாய் தன்னுடைய இருப்பினை காட்டிக்கொள்ள தமிழக அரசின் பணிகளை முதல்வரின் பணிகளைக் குறை கூறினார். அதைவிட வேடிக்கை, கடந்த காலத்தில் அதிமுக அரசு செயல்பட்டதுபோல் செயல்பட வேண்டும் என அறிவுரை வேறு கூறுகிறார்.

2015 ஆம் ஆண்டுப் பெருமழையின் போது செம்பரம்பாக்கம் ஏரி நீர் நிரம்பி அதனைத் திறந்து விடுவதற்கு அன்றைய முதல்வரின் உரிய ஆணை கிடைக்காமல் அதிகாரிகள் ஐந்து நாள் காத்திருந்து, ஒருவழியாக ஆறாவது நாள் ஆணை கிடைத்து நீரைத் திறந்து விட்ட போது ஏற்பட்ட பேரழிவுகளையும், உயிரிழப்புகளையும், பெரும் சேதத்தையும் இன்னமும் மக்கள் மறக்கவில்லை.

அப்பெரும் அழிவுகளுக்கும், சேதத்திற்கும், உயிரிழப்புகளுக்கும் பிறகு கொற்றலை ஆற்றின் வடிகால் திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூபாய் 2800 கோடி வழங்கியது. இந்தப் பெரும் தொகையை முறையாகவும் சரியாகவும் பயன்படுத்தியிருந்தால் வடசென்னை இன்று வெள்ளத்தில் தத்தளித்து இருக்காது.

அதுபோலவே கோவளம் நிலப்பகுதியில் வடிகால் வசதி செய்ய ஜெர்மன் வளர்ச்சி வங்கி ரூபாய் 3500 கோடி ஒதுக்கியது. அத்தொகையையும் முறையாகச் சரியாகத் திட்டத்திற்குச் செலவிட்டு இருந்தால் தென்சென்னை வெள்ள பாதிப்புக்கு ஆளாகி இருக்காது. இதுபோக உலக வங்கி ரூபாய் 100 கோடியை மழைநீர் வடிகால் திட்டத்திற்குக் கொடுத்தது. இந்தத் தொகைகள் எல்லாம் அமைச்சர்களுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கும் அவர்களின் கல்லாப் பெட்டிகளை நிரப்பப் பயன்பட்டதே தவிர மக்கள் நலத் திட்டங்களுக்குச் செலவிடப்படவில்லை. அப்படி முறையாக செலவிட்டு இருந்தால் இன்றைக்கு சென்னை மாநகரம் வெள்ளத்தில் தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

ஸ்மார்ட் சிட்டி என்கின்ற பெயரில் உள்ளாட்சித்துறை அமைச்சர் வேலுமணி போக்குவரத்துக்குச் சீராக வழிவிட்டு, அகன்று இருந்த தியாகராய நகர் பாண்டியனார் பேரங்காடித் தெருக்களைக் குறுக்கி, நடைபாதைகளை அகலப்படுத்தி இன்றைக்குப் போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தை உருவாக்கியுள்ளார். இவை போன்ற திட்டங்களால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கும் அவர்களின் பணப்பெட்டியை நிரப்பவே பயன்பட்டன. திறனற்ற ஆட்சியாளர்களின் தேவையற்றத் திட்டங்களால் மக்கள் துயர்தெரிகின்றதே தவிர, அவர்களுக்கு ஒரு துளியும் பயன்படுவதாக இல்லை. சொன்னாலும் புரியாது மண்ணாளும் வித்தை.

கொட்டிய மழையால், வெள்ளம் சூழ்ந்த சென்னையில் முதலமைச்சர் ஆற்றிய மக்கள் நிவாரணப் பணிகளால், ஒரு முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும், எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார், நம் முதல்வர். ●

# கருஞ்சட்டைப் பதிப்பகம்

பார்ப்பனியம் தன் பழைய போர்முறை ஒன்றை மீண்டும் புதுப்பிக்கத் தொடங்கிவிட்டது.

சமூகநீதிக் கருத்தியலான திராவிடத்தை, தானே நேர்நின்று எதிர்க்காமல், தமிழ் முகமூடி அணிந்த சிலரைக் கொண்டு எதிர்ப்பது என்பதே அந்தப் பார்ப்பனியத்தின் பழைய உத்தி! ம.பொ.சி அவர்களை முன்னிறுத்தித் தொடங்கித் தோற்றுப்போன அதே செல்லரித்துப்போனப் பழைய தாக்குதல்.

இப்போது புதிதாய்ச் சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். திராவிடம் என்பது தமிழ் இன மறைப்பாம்! நீதிக்கட்சிக் காலத்திலிருந்து திராவிடக் கொள்கை தமிழர்களுக்குக் கேடு விளைவித்து விட்டதாம். எப்படி வரலாற்றைத் தலைகீழாய் புரட்டிப் போட முயற்சிக்கின்றனர் பாருங்கள்!

ஆனாலும் பூனைக் குட்டியை எவ்வளவு காலம் கோணிப் பைக்குள் அடைத்து வைக்க முடியும்? இப்போது அது வெளியே வந்துவிட்டது. போலி முகமூடிகள் இப்போது கிழிந்து தொங்குகின்றன. நாம் தமிழரா, திராவிடரா என்று கருத்தரங்கம் போட்டவர்கள், நேரடியாகவே நாங்கள் தமிழ் இந்துக்கள் என்று சொல்லி அம்பலப்பட்டுப் போயுள்ளனர். தமிழ்த் தேசியத்திலிருந்து மெல்ல இந்து தேசியத்திற்கு வந்துவிட்டனர். அய்யா பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் காலமெல்லாம் எதிர்த்த அந்த இந்துத்வத்தை மீண்டும் உயிர்ப்பிக்க அவர்கள் முற்படுகின்றனர். தங்களை ஆர் எஸ் எஸ் என்று நேரடியாக அறிவித்துக் கொள்ளாத ஒரு குறைதான்!

இதனை இன்று திராவிட இயக்கத்தினர் மட்டுமின்றி, தமிழ்த் தேசியர்களுமே மிகக் கடுமையாக எதிர்த்து நிற்கின்றனர். இவர்கள் “தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்கும் பார்ப்பனியக் கங்காணிகள்” என்கிறார் பொழிலன். இது தமிழ்த் தேசியத்திற்குச் செய்யும் “பச்சைத் துரோகம்” என்கிறார் ஆழி. செந்தில்நாதன்.

“திராவிடம் யாருக்கு கசக்கும்?” என்பதை விளக்கிச் சொல்கிறார் பேராசிரியர் கருணானந்தம். “திராவிடத் தமிழ்த் தேசியம்” என்பதை விளக்குகின்றார் வாலாசா வல்லவன்.

மேற்காணும் நால்வரும் ஆற்றிய உரைகளை நூல்களாகத் தொகுத்து, 22.10.2021 அன்று சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்டது.

இந்நூல்களை மக்களிடம் பரவலாகக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில், அடக்க விலைக்கும் குறைவாக 10 ரூபாய்க்கு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூலும் 10,000 படிகள் அச்சிடப்படுகின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் ஒரு இலட்சம் படிகளை மக்களிடம் கொண்டு சேர்த்திட வேண்டும் என்பது திட்டம்.

இதனை வெறும் வணிகமாக அன்று, திராவிட இயக்கத்தால் பயன்பெற்ற இச்சமூகத்தின் நன்றிக் கடனாகச் செய்து முடிக்க விரும்புகிறோம். இதில் உங்கள் பங்கும் பெரிய அளவில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். திராவிட இயக்க உணர்வுள்ள ஒவ்வொருவரும் ஒன்று, இரண்டு என்று இல்லாமல், பத்து, நூறு என்று நூல்களை வாங்கிப் படிப்பதோடு, மற்றவர்களுக்கும் கொடுத்துப் பரப்பிட வேண்டும் என்பது எம் வேண்டுகோள்! இணைய வழியிலும் (http://karunchattaibooks.com) நீங்கள் நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் இந்து என்னும் பெயரின் மூலம் மீண்டும் தலைதூக்க முயலும் பார்ப்பனியத்தை விரட்டி அடிப்போம். தமிழ் மொழியை, இனத்தை, நிலத்தைக் காக்கத் திராவிடக் கருத்தியலை என்றென்றும் உயர்த்திப் பிடிப்போம்!

**சுபவீ முகநூல் பதிவு**

**தொடர்புக்கு**
**120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**
**தொலைபேசி: 044-2472 6408 / 9940407468**

**இணையதளம்: www.karunchattaibooks.com**

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஸ்மார்ட் சிட்டி ?

அண்மையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட முதலமைச்சர், ஸ்மார்ட் சிட்டி விவகாரத்தில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

முறையான பராமரிப்புடன் கூடிய பரந்து விரிந்த சாலைகள், வீடுகளின் கழிவுநீர்க்குழாய்கள் அமைக்கப்பட்டு, அவை பொதுக்குழாயுடன் இணைக்கப்படுதல், மேம்படுத்தப்பட்டச் சுகாதார அமைப்பு முறை, நவீனத் தொழில் நுட்பங்களின் அடிப்படையில் வாழ்க்கைத்தர மேம்பாடுளுக்கானத் தீர்வுஎன அமைக்கப்படும் சிறப்பான நகர அமைப்பே “ஸ்மார்ட் சிட்டி”.

தமிழகத்தில் 11 நகரங்களைத் தேர்வு செய்து ஸ்மார்ட் சிட்டி உருவாக்க அ.தி.மு.க. ஆட்சியின் போது ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி 196 கோடி ருபாய்.

இதில் ஒரு விழுக்காடு கூட ( அ.தி.மு.க.) மாநில அரசு செலவு செய்யவில்லை, அதற்கும் குறைவாகவே செலவிட்டுள்ளது என்று மாநிலங்களவையில் ஒன்றிய வீட்டு மற்றும் நகர்ப்புற அமைச்சரவையில் வைத்த அறிக்கை கூறியிருக்கிறது.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், சென்னைக்கு மாநகராட்சி மூலம் வெறும் 3 கோடியும், கோவைக்கு 7 கோடியே 27 லட்சமும், சேலத்திற்கு 5 லட்சமும் ஏனைய தொகையை எட்டு மாவட்டங்களிலும் செலவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அ.தி.மு. க. அரசு சென்னை ஸ்மார்ட் சிட்டியை அமைக்க முறையாகவும், சரியாகவும் செயல்பட்டு இருந்தால் சென்னை மழைநீர் தேங்கிய வெள்ளக்காடாக ஆகியிருக்காது.

மாறாக, முதலமைச்சர் சொல்வது போல கமிஷன் - கரப்ஷன் என்று இருந்து விட்டு, ஸ்மார்ட் சிட்டி குறித்தச் சிந்தனையே இல்லாமல் இருந்தது அ.தி.மு.க அரசு. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மக்கள்.

எனவே முதல்வர் சொன்னது போல், ஸ்மார்ட் சிட்டி விவகாரத்தில் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம் என்பதை மக்கள் உணர்கிறார்கள்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமாராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**

தொலைபேசி: 044-2472 6408

# தமிழ்ச் சமூகத்தின் அடையாளம் திருவள்ளுவர்!

**தோழர் ஓவியா,** பெரியாரியலாளர் புதிய குரல்



**திருவள்ளுவர் ஞானஸ்நானம் பெற்ற கிறித்தவர் என்னும் கருத்தைக் கொண்ட "மற்ற உரைகள் அனைத்தும் தவறானவை என நிலைநாட்டும் திருக்குறள் உண்மை உரையும் வரலாற்று ஆதாரங்களும்" என்னும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது பற்றிய தங்களுடைய கருத்து.**

இந்த நூலை நான் இன்னும் படிக்காத காரணத்தால், நூலில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது பற்றி கருத்துச் சொல்ல முடியாது. ஆனால் திருக்குறள் ஒரு கிறிஸ்தவ மத நூல் என்பது நீண்டகாலமாக ஒரு சிலரால் சொல்லப்பட்டு வருகிறது. கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் கிறிஸ்தவம் என்பது மதமாகக் கட்டமைக்கப்படுகிறது. அதாவது அரச மதமாக உருவாகிறது. அதற்கு முன்பு இயேசு கிறிஸ்து நடத்தியது ஒரு மக்கள் இயக்கம். "பொய்" என்னும் தாயின் கருவில் பிறப்பவைதான் எல்லா மதங்களும். அப்படித்தான் இவ்வளவு பெரிய மதங்கள் கட்டப்படுகின்றன. மதத்தைப் பரப்ப வந்தவர்கள் பொய் சொல்வார்கள் என்பது நாம் எளிதில் புரிந்து கொள்ள வேண்டிய விசயம். அவர்கள் சொல்வதில் பொய்யே இருக்காது, அதை நாம் ஆய்ந்து பார்க்க வேண்டும் என்று சொல்கிற அளவிற்கு, இதைப் பெரிய விசயமாக நான் எடுத்துக் கொள்ளவில்லை.

இரண்டாவது, மனித இனம் ஒரே மாதிரியானக் கதைகளைச் சுமந்து சென்றிருக்கலாம். பெருவெள்ளத்தினால் வந்த அழிவு என்பது பைபிளில் சொல்லப்படுகிறது. அதே மாதிரியான செய்தி பிற மதங்களின் குறிப்புகளிலும் இருக்கிறது. மனித சமூகத்தின் ஒரு பொதுவான நிகழ்வு மதங்களுக்குள் பொதியப்பட்டு வேறு வேறு நிகழ்வுகளாக அது சொல்லப்பட்டிருக்கலாம். அப்படித்தான் நாம் இதைப் பார்க்க வேண்டும்.



ஓவியா

ஆனாலும் நாம் படித்த வரலாற்றின்படி கிறிஸ்தவ மதம் என்பது ஆங்கிலேயர்கள் வந்து நாட்டைப் பிடித்த போது இங்கு வந்தது. அதற்கு முன்பு இந்த மண்ணிற்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் தொடர்பில்லை என்பதுதான் நாம் அறிந்த வரலாறு. இந்த வரலாற்றைக் கேள்விக்கு உட்படுத்த வேண்டுமானால், மிகப் பெரிய தொல்லியல் ஆதாரங்களுடன் ஒருவர் கேள்விக்குட்படுத்தினால் நாம் அதில் குறுக்கே நிற்கப் போவதில்லை. ஜெருசேலத்திற்கும் கன்னியாகுமரிக்கும் என்ன உறவு இருந்தது என்பதை அவர்கள் சொல்லவேண்டும். அப்படியே அவர்கள் ஒரு விசயத்தைக் கட்டமைத்தாலும்கூட, அது ஒரு வரலாற்றுக் கட்டமைப்பாக இருக்க வேண்டுமே தவிர, அது என்ன திருவள்ளுவரை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்கள் மதவயப்படுத்துவது? தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக நிலைபெற்றிருக்கக் கூடிய திருவள்ளுவரை எங்கள் மதத்தைச் சார்ந்தவர் என்று சொல்வதை நேர்மையான கூற்றாக நாம் எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? மதவாதிகள் என்றாலே அவர்கள் பொய் சொல்வார்கள். இது ஆச்சரியமான விசயம் ஒன்றுமில்லை. ஏனெனில் மதவாதிகள் சிந்தனை என்பதும் ஒரு அரசியல்தான்.

திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலும் கூட அப்படிக் குறிப்பிடக் கூடியச் சான்றுகள் இல்லை. பொதுவான சிந்தனைகள் பைபிளுக்கும் திருக்குறளுக்கும் இருக்குமேயானால், அது இயேசு கிறிஸ்துவிடமிருந்து திருவள்ளுவர் பெற்றார் என்று சொல்ல முடியாது. திருவள்ளுவரிமிருந்து கூட இயேசு கிறிஸ்துவிற்குப் போயிருக்கலாம். இன்றைக்கு கிறிஸ்தவ மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளை விட்டு விட்டு இந்த மாதிரியான விஷயங்களுக்குள் திசைதிருப்ப வேண்டிய அவசியம் கிடையாது.

**"திருக்குறளும் ஆரியக் குரலே! - தோழர் பெரியார்" என்னும் ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. இது பற்றிய தங்களுடைய கருத்து.**

திருக்குறள் ஆரியக் குரலே என்றொரு வாசகத்தைப் பெரியார் சொல்லியிருப்பாரா என்று எனக்குத் தெரியவில்லை. பெரியாரின் உரைகள்தான் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. ஒரு மேடையில் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகப் பேச்சு அமையும். ஆரியத்தினுடைய ஆதிக்கத்திலிருந்து முழுமையாக விடுபட்டு நிற்பது திருக்குறள் என்பதைப் பெரியார் ஏற்றுக் கொள்ளவில்லை. அதைச் சில குறள்களை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கிறார் பெரியார். அதே சமயம் "திருக்குறள்" என்பது நாம் ஒரு அடையாளமாக எடுத்துக் காப்பாற்றப்பட வேண்டியது என்றும் பெரியார் பேசியிருக்கிறார்.

ஆக பெரியார், எப்போது, எதை, எந்த மேடையில் பேசியிருக்கிறார் என்பதைப் பொறுத்துதான் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள முடியும். அப்படி ஒரு விஷயத்தை மட்டும் உருவி எடுத்து வந்து ஒரு நூல் தலைப்பாக வைப்பது எல்லாம், இன்றைக்கு ஆர்எஸ்எஸ்காரர்களுக்கும், தமிழ் இளைஞர்களைத் திராவிடத்திற்கு எதிராகக் கட்டமைக்கக் கூடிய வேலைகளுக்கும் வேறு ஒரு வகையில் முட்டுக் கொடுப்பதாகவே அமையும்.

அதே பெரியார் திருக்குறள் மாநாடுகள் நடத்தினார். அப்படியானால் பெரியார் முரண்பாட்டின் வடிவம் என்று சொல்ல வருகிறார்களா? பெரியார் பேசியது என்ன, என்ன பேசுபொருள், என்பதைப் பொறுத்துச் சில மதிப்பீடுகள், சில விமர்சனங்கள் மாறுபடும். பெரியார் நீண்ட நெடிய காலம் பேசியிருக்கிறார். திருக்குறள் ஆரியக் குரல் என்று அவர் எழுதியதாக நான் படிக்கவில்லை. அப்படி எழுதி இருந்தாலும், முந்தைய அல்லது பிந்தைய பத்திகளுடன் சேர்த்துப் படிக்க வேண்டிய விசயமாக இருக்கும்.

பெரியார் மிகுந்த விழிப்புணர்வு கொண்ட தலைவர். அவருடைய இறுதிச் சொற்பொழிவு வரைக்கும், அவருடைய உரைகளில் ஞாபகமறதியோ, வயதானதால் உள்ள தடுமாற்றமோ, பிறழ்வுகளோ இல்லை. அவரைப் படிக்கும்பொழுது, ஒவ்வொன்றையும் விளக்கப்படுத்தியும் வியாக்கியானப்படுத்தியுமே அவர் பேசிக் கொண்டிருப்பதை விளங்கிக்கொள்ள முடியும். பெரியாரின் மொழியில் ஒற்றைச்சொல் தனியாக நிற்காது. அது பிற விசயங்களோடு பின்னிப்பிணைந்துதான் இருக்கும். அதனால் அவருடைய ஒற்றை வரியை உருவிக்கொண்டு, பெரியாரின் ஒரே கருத்து அதுதான் என்பதுபோல எழுதுவதும், தலைப்புகள் வைப்பதும், திரித்து நூல் வெளியிடுவதும் பெரியாருக்குச் செய்கின்ற துரோகம்.

**நேர்கண்டவர்: மா.உதயகுமார்**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian